நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 363/2025

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 53 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம்,மே மாதம், 11–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.25 PM

1. விபத்து நடந்தது 30.03.2024 ம் தேதி காலை 09.00 மணி என்றால் சரிதான். விபத்தில் காயமடைந்த சித்தன் நல்லாம்பட்டியில் யாரிடம் கட்டுக்கட்டி சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்று நான் விசாரிக்கவில்லை. மறுநாள் 31.03.2024 ம்

தேதிதான் மாலை 04.20 மணிக்குதான் மேட்டுர் அரசு மருத்துமவமனையில் மேற்படி சித்தன் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். 2 நாட்கள் காலதாமதமாகத்தான் மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. காலதாமதத்திற்கான காரணம் பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட சித்தன் வண்டியை இடதுப்புறமாக ஓரமாக நிறுத்திவிட்டு ரோட்டின் ஓரமாக நின்றிருந்தபோதுதான் இந்த விபத்து ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் சரிதான்.

3. ரோட்டின் ஓரமாகத்தான் விபத்து ஏற்பட்டுள்ளது. கீழே இறங்கி நிற்கும்போது விபத்து ஏற்படவில்லை. எதிரி ஓட்டிவந்த வாகனத்தின் உரிமையாளர் பற்றி தெரியவில்லை என அ.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்விற்கு 41 நாட்கள் காலதாமதமாக அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வண்டியின் உரிமையாளர் காவல் நிலையத்திற்கு வரும்போது வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு எடுத்துச்செல்வதுவழக்கம்.

4. வாதி கொடுத்த பொய்யான புகாரை பெற்று அதனடிப்படையில் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.35 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**